Bodhi International Journal of Research in Humanities, Arts and Science

Vol. 10 Special Issue 6 March 2026

E-ISSN: 2456-5571

# திருக்குறள் எடுத்துரைக்கும் தலைமைத்துவப் பண்புகள்: சூழ்நிலை தலைமைத்துவக் கோட்பாட்டு நோக்கு

# (Leadership Traits Explained in Thirukkural: A Contextual Leadership Theory Perspective)

**Dr. J. Arunkumar**

*Assistant Professor, Department of Tamil,*

*Madras Christian College, Chennai*

Open Access

Manuscript ID: BIJ-SPL6-MAR26-MD-326

Subject: Tamil

Received : 30.012026

Accepted : 05.02.2026

Published : 25.03.2026

DOI: 10.64938/bijsi.v10si6.26.Mar326

Copy Right:

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License.

**Abstract**

*One of the modern theories is management theory. Through these theories, the methods for a person to achieve leadership are explained; the personality and action skills of the leader are explained. Such modern thoughts are mentioned in Tamil literature. Management-related concepts are mentioned in the following eighteen books that emerged during the Sangam era. In particular, the Thirukkural written by Valluvar highlights various elements of leadership qualities that are the basis for the leader's governance. The leadership-related concepts expressed in the Thirukkural are consistent with the concepts of situational leadership theory. The concepts mentioned in Valluvar's Thirukkural, such as the skills required for a leader to work together with his employees and the ability of a leader to make decisions according to the situation, have been examined in this article based on the situational leadership theory. The verses in the chapters of Thirukkural, namely, "Shrukkatthala", "Shrukkatthala", "Valiyarithal", "Kalamaithal", "Itanarital", and "Otratatal", have been taken as the primary data for the study. The descriptive analytical approach and the comparative analytical approach have been used in this study.*

**Keywords: Communication, Situational Leadership Theory, Leadership Traits, Clarity**

***ஆய்வு முன்னுரை***

*நவீனக் கோட்பாடுகளுள் ஒன்றாக மேலாண்மை சார்ந்த கோட்பாடுகள் உள்ளன. இக்கோட்பாடுகள் வழியாக மனிதன் தலைமைத்துவம் பெற்றுத் திகழ்வதற்குரிய வழிமுறைகளை எடுத்துரைக்கப்படுகின்றன, தலைவனின் ஆளுமைத்திறன், செயல் திறன் போன்றவை எடுத்துரைக்கப்படுகின்றன. இத்தகைய நவீன சிந்தனைகள் தமிழ் இலக்கியங்களில் குறிக்கப்பெற்றுள்ளன. சங்கம் மருவிய காலத்தில் எழுந்த பதினென் கீழ்க்கணக்கு நூல்களில் மேலாண்மை சார்ந்த கருத்துகள் சுட்டப்பெற்றுள்ளன. குறிப்பாக வள்ளுவர் படைத்த திருக்குறள், தலைவனின் ஆட்சித்திறத்திற்கு அடிப்படையாக இருக்கும் தலைமைத்துவப் பண்பின் பல்வேறு கூறுகளை எடுத்துரைக்கிறது. திருக்குறளில் வெளிப்படுத்தப்பட்டுள்ள தலைமைத்துவம் சார்ந்த கருத்துகள் சூழ்நிலை தலைமைத்துவக் கோட்பாட்டுக் கருத்துகளோடு பொருந்தி அமைகின்றன. தலைவன் பணியாளர்களோடு ஒருங்கிணைந்து செயல்படுவதற்குத் தேவையான திறன்கள், சூழ்நிலைக்கு ஏற்ப தலைவன் முடிவுகளை எடுக்கும் திறன் என வள்ளுவர் திருக்குறளில் குறிப்பிட்டுள்ள கருத்துகள் சூழ்நிலை தலைமைத்துவக் கோட்பாட்டின் அடிப்படையில் இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளன. திருக்குறளில் இடம்பெறும் தெரிந்து தெளிதல், தெரிந்து வினையாடல், வலியறிதல், காலமறிதல், இடனறிதல், ஒற்றாடல் ஆகிய*

*அதிகாரங்களில் இடம்பெறும் குறட்பாக்கள் ஆய்வின் முதன்மைத் தரவுகளாகக் கொள்ளப்பட்டுள்ளன. இவ்வாய்வில் விளக்கமுறைத் திறனாய்வு அணுகுமுறையும் ஒப்பீட்டுத் திறனாய்வு அணுகுமுறையும் பயன்படுத்தப்பட்டுள்ளன.*

***திறவுச் சொற்கள்: ஒற்றாடல், சூழ்நிலை தலைமைத்துவக் கோட்பாடு, தலைமைத்துவப் பண்புகள், தெரிந்து தெளிதல்***

**முன்னுரை**

சங்கம் மருவிய காலத்தில் தோன்றிய நூல்கள் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள். இவற்றுள் பெரும்பாலானவை நீதி நூல்களாக இருக்கின்றன. நாலடியார், நான்மணிக்கடிகை, இன்னா நாற்பது, இனியவை நாற்பது, திருக்குறள், திரிகடுகம், ஆசாரக்கோவை, பழமொழி நானூறு, சிறுபஞ்சமூலம், முதுமொழிக்காஞ்சி, ஏலாதி ஆகிய 11 நூல்களும் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் நீதி நூல்களாகத் திகழ்கின்றன. இவற்றுள் உலக மக்களால் போற்றப்படும் சிறப்பினைப் பெற்றுத் திகழ்வது திருக்குறளாகும். வள்ளுவரால் இயற்றப்பட்ட திருக்குறள் அறத்தை மட்டும் வலியுறுத்தாமல் தலைவனின் ஆட்சித்திறன், செயல்பாட்டுத் திறன், ஆளுமைத் திறன் ஆகியவற்றையும் வலியுறுத்துகிறது. தலைவனின் தனித்துவமிக்க பண்புகளாக வள்ளுவர் குறிப்பிடுவன மேலாண்மைக் கோட்பாட்டு நோக்கில் ஆராயும் தன்மை உடையன. குறிப்பாக சூழ்நிலைத் தலைமைத்துவக் கோட்பாட்டின் நோக்கில் வள்ளுவர் எடுத்துரைக்கும் தலைமைத்துவப் பண்புகள் திகழ்கின்றன. இதனை ஆராயும் நோக்கில் இக்கட்டுரை அமைக்கப்பட்டுள்ளது.

**வள்ளுவரின் குறட்பாக்கள்**

திருவள்ளுவர் 1330 குறட்பாக்களில் அறத்தின் சிறப்புகளையும், தலைவனின் பல்வகைத் திறன்களையும் அரசியல் சார்ந்த கருத்துகளையும், மக்களின் அகம் சார் வாழ்க்கையையும் எடுத்துரைத்துள்ளார். அவர் எடுத்துரைத்த குறட்பாக்கள் 133 அதிகாரங்களில் அறத்துப்பால் பொருட்பால் இன்பத்துப்பால் என்கிற மூன்று இயல்களில் இடம்பெற்றுள்ளன. அறத்துப்பாலில் நான்கு இயல்களும் 38 அதிகாரங்களும்; பொருட்பாலில் மூன்று இயல்களும் 70 அதிகாரங்களும்; இன்பத்துப்பாலில் இரண்டு இயல்களும் 25 அதிகாரங்களும் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

வள்ளுவர் உரைத்த குறட்பாக்களின் சிறப்புகளைப் புலவர்களும் அறிஞர்களும் குறிப்பிட்டுக் காட்டியுள்ளனர். வள்ளுவர் எழுதிய திருக்குறள் அமிர்தத்தை விட மேலானது என்று ஆலங்குடி வங்கனார் குறிப்பிட்டுள்ளார். இதனை,

> **"வள்ளுவர் வழங்கி அருளிய திருக்குறள் என்னும் தெள்ளமுதின் தீஞ்சுவைக்கு வானவர் உண்ட அமிழ்தின் அருஞ்சுவையும் ஒவ்வாது"**
>
> ***(நவநீத கிருட்டிணன், ப.3)***

என்ற கருத்தின் வழி தெரிந்து கொள்ள முடிகிறது.

திருக்குறளில் கூறப்பட்டுள்ள கருத்துகள் சமயம், மொழி மற்றும் இன வேறுபாடுகளற்றதாகத் திகழ்கின்றன. மேலும் திருக்குறள் காலத்தைக் கடந்த நூலாக விளங்குகிறது. திருக்குறளின் பெருமையை ரா.பி.சேதுப்பிள்ளை,

> ***"முக்காலத்திற்கும் பொதுவாய, விழுமிய உண்மைகள் நிறைந்து திகழுகின்ற காரணத்தால், திருக்குறளைக் காலம் கடந்த நூல் என்று கூறுவது மிகையாகாது"***
>
> ***(சேதுப்பிள்ளை, ப.22)***

என்று கூறியுள்ளார்.

மனோன்மணீய நாடக நூலாசிரியரான பெ.சுந்தரம்பிள்ளை திருக்குறளின் சிறப்பை,

> **" வள்ளுவர் செய்திருக்குறளை**
> **மறுவறதன்குணர்தோர்கள்**
> **உள்ளுவரோ மனுவாதி ஒருகுலத்துக் கொருநீதி"**
>
> ***(சவரிமுத்து, ப.103)***

எனக் குறிப்பிட்டுக் காட்டியுள்ளார்.

திருக்குறளின் சிறப்புகளை உணர்ந்த ஐரோப்பிய அறிஞர்கள் திருக்குறளைப் பல்வேறு உலக மொழிகளில் மொழிபெயர்த்தனர். இந்திய மொழிகளான தெலுங்கு, மலையாளம், உருது, இந்தி, வடமொழி, வங்கம் ஆகிய மொழிகளிலும் திருக்குறள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. திருக்குறளுக்குப் பல்வேறு பெயர்களும் உள்ளன. உத்தரவேதம், முப்பால், தெய்வ நூல், திருவள்ளுவம், பொய்யாமொழி, வாயுறை வாழ்த்து, தமிழ்மறை, பொதுமறை ஆகியன திருக்குறளின் வேறு பெயர்களாக இருக்கின்றன.

திருக்குறளுக்குப் பல்வேறு அறிஞர்கள் உரைகளை எழுதியுள்ளனர். அவ்வுரைகளுள் பழமையான உரையாசிரியர்களுள் ஒருவரான பரிமேலழகரின் உரை மிகவும் சிறப்பானதாகக் கருதப்படுகிறது.

மனிதனின் வாழ்க்கையில் அறத்தின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டிய வள்ளுவர்,

Vol. 10 Special Issue 6 March 2026
E-ISSN: 2456-5571

மனிதனின் ஆளுமையை மேம்படுத்த உதவும் தலைமைத்துவப் பண்புகளையும் குறட்பாக்கள் வழி எடுத்துரைத்துள்ளார். திருக்குறளில் இடம்பெறும் பொருட்பால் இயலில் தலைவனின் தனித்துவமிக்க பண்புகளாக இருக்கும் தலைமைத்திறன், செயலாற்றும் முறை, காலம் மற்றும் இடத்தைக் கையாளுகின்ற முறை, பணிக்கு ஏற்ற ஆளைத் தேர்ந்தெடுத்தல் ஆகியன கூறப்பட்டுள்ளன.

**சூழ்நிலை தலைமைத்துவக் கோட்பாடும் வள்ளுவரின் பொருட்பால் கருத்துகளும்**

ஒரு குறிப்பிட்ட இலக்கை அடைவதற்கு, மனித வளம், பொருள் வளம், நேரம் ஆகியவற்றைச் சரியான முறையில் ஒருங்கிணைத்து, திட்டமிட்டு நெறிப்படுத்திச் செயல்படுத்துவதை ‘மேலாண்மை’ (Management) என்று அறிஞர்கள் குறிப்பிடுவர்.

எந்த ஒரு செயலையும் சரியான முறையில் கையாளுவதற்கு உதவும் திறனை மேலாண்மை வழங்குகிறது. திட்டமிடுதல், செயல்முறைகளை ஒழுங்கமைத்தல், பிறரின் ஆளுமைத் திறனைக் கண்டறிந்து செயல்படுதல், காலத்தை, இடத்தைக் கையாளுதல், சூழ்நிலைகளைக் கண்டறிந்து கையாளுதல் ஆகியன மேலாண்மையின் முக்கியக் கூறுகளாக உள்ளன. இக்கூறுகள் தலைமைத்துவப் பண்புகளாகவும் விளங்குகின்றன.

மேலாண்மை சார்ந்த கருத்துகளை எடுத்துரைக்கும் கோட்பாடுகள் பல தோன்றியுள்ளன. அவற்றுள் ‘சூழ்நிலை தலைமைத்துவக் கோட்பாடு’ (Situational leadership) இன்றியமையாததாக உள்ளது. இக்கோட்பாடு தலைமைத்துவப் பண்பை மட்டும் எடுத்துரைக்காமல் பணியாளர்களோடு ஒருங்கிணைந்து செயல்படும் முறைகளையும் எடுத்துரைக்கிறது. பணியாளர்களின் திறன்களை அறிந்து அவர்களின் திறனுக்கு ஏற்ற செயலை நிர்ணயிப்பதில் தலைவனின் பங்கு எவ்வாறு உள்ளது என்பதையும் இக்கோட்பாடு எடுத்துரைக்கிறது. இக்கோட்பாடு, 1969 ஆம் ஆண்டு டாக்டர் பால் ஹெர்சி (Dr. Paul Hersey) மற்றும் டாக்டர் கென் பிலான்செர்ட் (Dr. Ken Blanchard) என்கிற அறிஞர்களால் உருவாக்கப்பட்டது. இக்கோட்பாட்டில் தலைவர்களின் தலைமைத்துவப் பண்புகளுள் இன்றியமையாத கூறுகளான பணியாளர்களோடு ஒருங்கிணைந்து நடத்தல், பணியாளர்களின் திறன்களை ஆராய்ந்தறிந்து அதற்கேற்ப அவர்களிடம் பணியை வழங்குதல், சூழ்நிலைக்கு ஏற்றவாறு முடிவை எடுத்தல் ஆகியவை சுட்டப் பட்டுள்ளன. இக்கோட்பாட்டின்படி நான்கு நிலைகளில் தலைவர்கள் தங்களின் தலைமைத்துவப் பண்பை செயல்படுத்துகின்றனர். அவற்றுள் முதல் நிலையாக, ஒரு செயலைப் பற்றி பணியாளர்களுக்கு எடுத்துக்கூறி, அச்செயலில் அவர்களை ஈடுபடுத்துதல் (Telling) இருக்கிறது. இரண்டாம் நிலையாகத் தலைவர் தமது கருத்துகளைப் பணியாளர்களிடம் கொண்டு செல்லுதல்(Selling) உள்ளது. மூன்றாவது நிலையாக பணியாளர்களைப் பங்கேற்க வைத்தல் (Participating) உள்ளது. நான்காவது நிலையாகப் பணியாளர்களுக்குரிய செயலை அவர்களிடம் முழுமையாக ஒப்படைத்தல் (Delegating) அமைகிறது. மேலும் பணியாளர்களின் செயல் திறன் மற்றும் ஆளுமைத் திறன் அடிப்படையில் பணியாளர்களும் நான்கு வகையினராகப் பிரிக்கப்பட்டுள்ளனர்.

மேலாண்மை சார்ந்த கருத்துகள் தமிழிலக்கியங்கள் பேசப்பட்டுள்ளன. குறிப்பாக தலைவர்களின் தலைமைத்துவப் பண்புகளும் செயல்பாடுகளும் கூறப்பட்டுள்ளன. அவ்வகையில் வள்ளுவரும் தலைமைத்துவப் பண்புகளைப் பற்றி திருக்குறளில் எடுத்துக்காட்டியுள்ளார் .

> **“அரசியல் செம்மையாக நடக்க, நல்லியலாக இயங்க, எவ்வெவற்றைக் கொள்ள வேண்டும் எவ்வெவற்றைத் தள்ள வேண்டும் என்று வழிகாட்டுகிறது திருக்குறள்”**
>
> ***(சுந்தரவடிவேலு, ப.150)***

என்ற கருத்திலிருந்து தலைமைத்துவப் பண்பிற்குத் திருக்குறள் கொடுக்கும் முக்கியத்துவத்தை அறிய முடிகிறது.

தலைமைத்துவம் சார்ந்த கருத்துகள் அரசியல் என்ற பகுதியில் உரைக்கப்பட்டுள்ளன. தலைவன் நுண்ணாய்வு செய்து செயல்படுதல், மற்றவர்களின் வலிமையை அறிந்து செயல்படுதல், இடம் மற்றும் காலத்தைக் கையாளுதல், நுட்பமாக ஆராய்ந்து பணியாளர்களைத் தேர்ந்தெடுத்தல், சூழ்நிலைக்கு ஏற்றவாறு செயல்படுதல் போன்றவை வள்ளுவரால் சுட்டுப் பெற்றுள்ளன. இக்கருத்துகள் சூழ்நிலைத் தலைமைத்துவக் கோட்பாட்டின் மையக் கருத்துகளோடு ஒப்பிட்டு நோக்கத்தக்கனவாக உள்ளன.

**சூழ்நிலை தலைமைத்துவக் கோட்பாட்டு நோக்கில் வள்ளுவர் எடுத்துரைக்கும் தலைமைத்துவப் பண்புகள்**

சூழ்நிலை தலைமைத்துவக் கோட்பாடு, தலைவர்களின் தலைமைத்துவப் பண்பு சூழ்நிலைக்கு ஏற்றவாறு அமைவதையும் ஒரு செயலைச் செய்வதற்குத் தேவைப்படும் ஒருங்கிணைப்பையும் வலியுறுத்துகிறது. இங்கு ஒருங்கிணைப்பு என்பதில் தலைவனின் நுண்ணாய்வு நுட்பத்திறன் இன்றியமையாததாக விளங்குகிறது. இதனை எடுத்துக்கூறும் வகையில் தெரிந்துதெளிதல், தெரிந்து வினையாடல், வலியறிதல், இடனறிதல், காலமறிதல் ஆகிய அதிகாரங்களில் வள்ளுவர் குறிப்பிட்டுள்ளார். ஒரு தலைவன் தனக்குக் கீழுள்ள பணியாளர்களின் செயல் திறன்களை நுட்பமாக ஆராய்ந்து தெளிந்த பின்னர் அவர்களைத் தேர்ந்தெடுத்து செயல்படுதல் வேண்டும் என்பதை வள்ளுவர்,

**"தேறற்க யாரையும் தேராது தேர்ந்தபின்**
**தேறுக தேறும் பொருள்"**

***(குறள் 509)***

என்று குறிப்பிடுகிறார்.

ஒரு செயலைச் செய்ய ஒரு பணியாளரைத் தேர்வு செய்யும்போது அவரின் முழுத்திறன்களையும் ஆய்வு செய்து தேர்வு செய்ய வேண்டும். அவ்வாறு அவரைத் தேர்வு செய்தபின் அவரின் முழு ஆளுமையும் வெளிப்படுமாறு பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பது மேற்குறிப்பிடப்பட்டுள்ள குறட்பாவின் கருத்தாகும்.

ஒரு செயலைச் செய்து முடிக்க பணியாளர்களை நியமிக்க எண்ணினால் அவர்கள் அச்செயலைச் செய்து முடிக்கும் வல்லமை பெற்றவர்களாக இருக்க வேண்டும். இதனை ஆராய்ந்து அறிதல் தலைவனின் கடமையாகும் என்பதை,

**"அறிந்துஆற்றிச் செய்கிற்பாற்கு அல்லால் வினைதான்**
**சிறந்தான்என்று ஏவற்பாற் றன்று"**

***(குறள் 515)***

என்கிற குறட்பாவின் வழி வள்ளுவர் எடுத்துரைக்கிறார்.

மேலும் ஒரு தலைவன் தனக்குக் கீழ் உள்ள பணியாளர்களின் ஆளுமைத் திறனை மட்டுமல்லாமல் தன்னுடைய ஆளுமைத் திறனையும் ஆராய்ந்து அறிந்து தெளிய வேண்டும் என்பதை வள்ளுவர்,

**"வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்**
**துணைவலியும் தூக்கிச் செயல்"**

***(குறள் 471)***

என்ற குறட்பாவின் வழி கூறுகிறார். இக்குறட்பா ஒரு தலைவன் எத்தகைய நுட்பமான ஆய்வுத்திறனைக் கொண்டிருக்க வேண்டும் என்பதை உரைக்கிறது.

ஒரு தலைவன் இடத்தையும் காலத்தையும் மிகவும் நுட்பமாக ஆராய்ந்து கையாள வேண்டும். அவ்வாறு செய்யும் போது அவனுடைய தலைமைத்துவப் பண்பு சிறந்து விளங்குகிறது. இதனை எடுத்துக் காட்டும் வகையில் காலமறிதல், இடனறிதல் ஆகிய அதிகாரங்களில் வள்ளுவர் சில கருத்துகளைக் குறிப்பிட்டுக் காட்டியுள்ளார்.

ஒரு செயலை செய்வதற்கு முன்பாக அதற்கேற்ற காலத்தை அறிந்து செயல்பட வேண்டும் என்று வள்ளுவர் எடுத்துரைக்கிறார். இதனை

**"காலம் கருதி இருப்பர் கலங்காது**
**ஞாலம் கருது பவர்"**

**(குறள் 485)**

என்று கூறியுள்ளார். ஒரு செயலை செய்து முடிக்க நினைக்கும் தலைவன் அச்செயலைச் செய்வதற்குத் தகுந்த காலத்தை எண்ணிக் காத்திருந்து செயல்படுவார் என்று இதன் வழி வள்ளுவர் கூறுகிறார்.

மேலும் ஒரு செயலை செய்வதற்கேற்ற இடத்தையும் தலைவன் ஆராய்ந்து செயலாற்ற வேண்டும் என்பதை,

**"எண்ணியார் எண்ணம் இழப்பர் இடன்அறிந்து**
**துன்னியார் துன்னிச் செயின்"**

***(குறள் 494)***

என்ற குறளில் உரைக்கிறார். இடத்தைப் பற்றி ஆராய்ந்து அறிந்த பின்பு செயலை செய்ய தொடங்குதல் அவசியமாகும். இதன்படி தலைமைத்துவப் பண்புகளுள் தலைவனின் நுண்ணாய்வுத் திறன் ஒரு முக்கியப் பண்பாகத் திகழ்வதை அறிந்து கொள்ள முடிகிறது. இப்பண்பு ஒரு செயலைச் செய்வதற்கேற்ற பணியாளர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு மட்டுமல்லாமல் அவர்களோடு சரியாக ஒருங்கிணைந்து செயல்படவும் உதவுகிறது.

சூழ்நிலை தலைமைத்துவக் கோட்பாடின் படி பணியாளர்களுக்கு அவர்கள் செய்ய வேண்டிய செயலை எடுத்துக்கூறி அவர்களை அதில் ஈடுபடுத்துதல் தலைமைத்துவப் பண்புகளுள் ஒன்றாக இருக்கிறது. இப்பண்பை உணர்த்தும் வகையில் வள்ளுவர்,

**"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றுஆய்ந்து**
**அதனை அவன்கண் விடல்"**

***(குறள் 517)***

Vol. 10 Special Issue 6 March 2026
E-ISSN: 2456-5571

என்னும் குறட்பாவிலும்

**"வினைக்குஉரிமை நாடிய பின்றை அவனை**
**அதற்குஉரிய னாகச் செயல்"**

***(குறள் 518)***

என்னும் குறட்பாவிலும் குறிப்பிட்டுள்ளார்

இத்தகைய குறட்பாக்களிலிருந்து எவர் எத்தகைய செயலைச் செய்து முடிக்கத் தகுதியானவர் என்பதை அறிந்து அவரிடம் அச்செயலை ஒப்படைத்தல் வேண்டும் என்பதை உணர முடிகிறது. சூழ்நிலை தலைமைத்துவக் கோட்பாடு முன்னிறுத்தும் தலைமைத்துவப் பண்பை இங்கு ஒப்பிட்டுக் காண முடிகிறது.

இறுதியாக, சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு தலைமைத்துவப் பண்புகள் வெளிப்படுவதைக் குறித்து சூழ்நிலை தலைமைத்துவக் கோட்பாடு கூறுகிறது. சூழ்நிலைகளுக்கு ஏற்ப தலைவர்கள் தங்களுடைய செயல்திறன்களை மாற்றி அமைத்து அவற்றிற்கு ஏற்றாற் போல முடிவுகளை எடுத்துக் கொள்கின்றனர். இதனை வள்ளுவரும் சுட்டிக் காட்டுகிறார்.

ஒற்றாடல் என்கிற அதிகாரத்தில் ஓர் ஒற்றன் கொண்டுவந்த செய்தியை முழுமையாக நம்பாமல் வேறொரு ஒற்றனைக் கொண்டு மன்னன் சரி பார்த்துக் கொள்ளுதலை வள்ளுவர்,

**"ஒற்றுஒற்றித் தந்த பொருளையும் மற்றுமோர்**
**ஒற்றினால் ஒற்றிக் கொளல்"**

***(குறள் 588)***

எனக் குறிப்பிடுகிறார். இக்குறட்பாவின் வழியாக ஒரு தலைவன் சூழ்நிலைகளை எவ்வாறு கையாளுகிறான் என்பதையும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப எவ்வாறு முடிவெடுக்கிறான் என்பதையும் தெரிந்து கொள்ள முடிகிறது. சூழ்நிலைகளுக்கு ஏற்ப தலைமைத்துவப் பண்புகள் வெளிப்படுவதை இங்கு ஒப்பிட்டுக் காண முடிகிறது.

**முடிவுரை**

வள்ளுவர் எடுத்துரைத்துள்ள தலைமைத்துவப் பண்புகள் சூழ்நிலை தலைமைத்துவக் கோட்பாட்டுக் கருத்துகளோடு ஒத்துப் போகின்றன. குறிப்பாக ஒரு தலைவன் பணியாளர்களோடு ஒருங்கிணைந்து நடப்பதற்குத் தேவைப்படும் திறன்களும் பணியாளர்களிடம் செயலை ஒப்படைக்கும் திறன்களும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப செயல்படும் திறன்களும் சூழ்நிலை தலைமைத்துவக் கோட்பாட்டோடு பொருந்தியுள்ளன. ஒரு தலைவனைத் தன்னிகரில்லாதவனாக மாற்றுவதற்கு அவனுடைய நுட்பமான ஆய்வுத் திறன் பயன்படுவதை உணர்ந்தே வள்ளுவர் அத்திறனைக் குறித்து எடுத்துரைக்கும் குறட்பாக்களை மிகுதியாகக் கையாண்டுள்ளார் என்பதை ஆய்வின் வழி தெரிந்து கொள்ள முடிகிறது.

**மேற்கோள் நூல்கள்**

1. சவரிமுத்து,சா., எளிய முறையில் தமிழ் இலக்கிய வரலாறு, மணிமொழி பதிப்பகம், சென்னை, 2015.
2. சுந்தர வடிவேலு,நெ.து., வள்ளுவர் வாய்மொழி, வானதி பதிப்பகம், சென்னை, 1973.
3. சேதுப்பிள்ளை,ரா.பி., திருவள்ளுவர் நூல் நயம், தென்னிந்திய சைவ சிந்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1923.
4. நவநீத கிருட்டிணன்,அ.க., வள்ளுவர் சொல்லமுதம், தென்னிந்திய சைவ சிந்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1956.
வரதராசனார்,மு., திருக்குறள் தெளிவுரை, தென்னிந்திய சைவ சிந்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1949.